இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 30.09.2026

தமிழக வாபஸ் கழகம்!

எதைக் கொண்டு வருகிறார்களோ அதையே அவர்கள் வாபஸ் பெற்றுக் கொள்வதால், இந்த அரசை 'தமிழக வாபஸ் கழக அரசு' என்று சொல்லலாம்.

விஜய் ஆட்சிக்கு வந்த பிறகு மிகமிக மோசமானது சட்டம் - ஒழுங்கு தான். கிரிமினல்கள் ராஜ்யம் என்று சொல்லத்தக்க வகையில் குற்றச்சம்பவங்கள் நடக்கின்றன. இது பற்றி எல்லாம் கேள்வி கேட்கக் கூடாது என்று நினைக்கிறது த.வெ.க. ஆட்சி. அதனால் தான் சட்டம் - ஒழுங்கு குறித்த கேள்விகளுக்கு பதில் அளிக்க முடியாது என்று அரசாணை போடுகிறார்கள்.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் என்பது மக்களுக்குத் தரப்பட்டுள்ள மாபெரும் அரசியல் உரிமை ஆகும். அதைப் பறிக்கும் வகையில் ஒரு அரசாணையை விஜய் அரசு செப்டம்பர் 21 ஆம் தேதியன்று பிறப்பித் துள்ளது. 'சட்டம் - ஒழுங்கு தொடர்பான கேள்விகளுக்கு இனி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பதில் அளிக்கப்படாது' என்பதுதான் அந்த அரசாணை ஆகும். தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 24(4) இன் கீழ் மாநில அரசுக்கு இத்தகைய சிறப்பு அதிகாரம் இருப்பதாக விஜய் அரசு சொல்கிறது.இது அப்பட்டமாகவே குற்றங்களை மறைக்கும் முயற்சி ஆகும். போலீசைக் காப்பாற்றும் முயற்சியாகும். 'போலீஸ் ராஜ்யம்' நடத்த நினைக்கிறார் முதலமைச்சர் விஜய்.

மாணவர்கள், விவசாயிகள், அரசியல் கட்சிகளின் போராட்டங்கள், கைதுகள் குறித்து கேள்வி கேட்க முடியாது. போலீஸ் சித்திரவதைகள், விசாரணைக் கைதிகளின் மரணங்கள் குறித்து சந்தேகக் கேள்விகளைக் கேட்க முடியாது. துப்பாக்கிச் சூடுகள் நடந்தால் அதன் காரணத்தையோ, காரணம் ஆனவர் களையோ தெரிந்து கொள்ள முடியாது. அரசியல் காரணங்களை அறிய முடியாது. சாதி மோதல்கள் தொடர்பாக பதிவான வழக்குகள் என்றால் அது குறித்தும் தெரிந்து கொள்ள முடியாது. பொதுவாகவே போராட்டங்கள் என்றால் அது தொடர்பாக பதியப்பட்ட வழக்குகளைத் திரும்பப் பெறுவதற்கான கோரிக்கைகளைக் கையாள முடியாது. இவை குறித்த எந்த தகவலையும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெற முடியாது.

'போலீஸ் ராஜ்யம் நடத்த நினைக்கிறாரா விஜய்?' என்று பல்வேறு தரப்பினரும் கடுமையான எதிர்ப்பை பதிவு செய்த நிலையில் அந்த அரசாணையை ரத்து செய்து விட்டோம் என்று அறிவித்துள்ளது த.வெ.க. அரசு.

பெரும்பான்மை பலம் இல்லாமல் அடுத்தவர் தயவால் ஆட்சியை ஓட்டிக் கொண்டிருக்கும் போதே இத்தகைய சர்வாதிகார, அராஜக அரசாணை களை போடுகிறார் விஜய் என்றால், இவர் எல்லாம் பெரும்பான்மை பெற்றால் அந்த ஆட்சி எத்தகைய ஆட்சியாக இருக்கும் என்பதற்கு இது உதாரணம் ஆகும்.

ஒரு அரசாணையை வெளியிடும் போது ஆயிரம் முறை சிந்திக்க வேண் டும். அத்தகைய சிந்தனைத் திறனற்ற அரசாக த.வெ.க. அரசு இருக்கிறது. தான் நினைப்பதை அரசாணையாக வெளியிடுகிறார்கள். மக்கள் எதிர்ப்பு வந்ததும் வாபஸ் பெறுவார்கள். இது விஜய் ஆட்சிக்கு வழக்கமானதுதான்.

- **தான் முதலமைச்சர் ஆனதும், விஜய் செய்த முதல் காரியம் தனது ஆஸ்தான ஜோசியருக்கு அரசுப் பதவியை வழங்கினார். எதிர்ப்பு கிளம்பியதும் அதனை வாபஸ் பெற்றார்.**
- **மாநகராட்சி தூய்மைப் பணிகளை தனியாருக்குத் தரப்போவதாக டெண்டர் விட்டார். எதிர்ப்பு கிளம்பியதும் அந்த அரசாணை திரும்பப் பெறப் பட்டது.**
- **அரசியல் போராட்டங்களில் மாணவர்கள் பங்கேற்கத் தடை என்று ஒரு அரசாணை வந்தது. எதிர்ப்பு கிளம்பியதும் வாபஸ் என்று அறிவிக்கப்பட்டது.**
- **திண்டுக்கல் மாவட்டம் குஜிலியம்பாறை பகுதியில் இடதுசாரிகள் குறித்த தகவல்களைத் திரட்ட அரசு உத்தரவு போட்டது. எதிர்ப்பு வந்ததும் அந்த உத்தரவு ரத்து ஆனது.**
- **காலை உணவுத் திட்ட விரிவாக்கத்துக்கான அடிப்படை வசதிகளை அந்தந்தப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் தங்களது சொந்த நிதியில் இருந்து செய்ய வேண்டும் என்று அரசாணை போட்டார்கள். எதிர்ப்புக்கு பிறகு வாபஸ் பெற்றார்கள்.**
- **சென்னையில் சொத்து வரி திடீரென்று ஒருநாள் அதிகம் ஆனது. மக்கள் எதிர்ப்பு கிளம்பியதும் வாபஸ் என்று அறிவித்தார்கள்.**
- **செய்யாறு சிப்காட் தொழிற்சாலை நிலம் கையகப்படுத்துதல் தொடர்பான நிலைப்பாட்டிலும் தடுமாறினார்கள்.**
- **இந்த வரிசையில் தான் சட்டம் - ஒழுங்கு தொடர்பான தகவலைப் பெற முடியாது என்ற அரசாணையும் வாபஸ் பெறப்பட்டுள்ளது.**

அப்படியானால் இந்த அரசு வாபஸ் அரசுதானே? ஆட்சியாளர்களுக்கும் அதிகாரிகளுக்கும், அமைச்சர்களுக்கும் ஐ.ஏ.எஸ்.களுக்கும் இடையே ஒருங்கிணைப்பு இல்லை என்பதற்கு இவை எல்லாம் உதாரணங்கள். ஆட்சிச் சக்கரம் அதனதன் விருப்பத்துக்கு ஓடுகிறது என்பதற்கு இவை எல் லாம்தான் ஆதாரங்கள்.

புதிய தலைமைச் செயலகம் பட்டினப்பாக்கத்தில் அமையப் போகிறது என்கிறது ஒரு அரசாணை. பிரச்சினை பெரிதாகி மீனவர்கள் கடுமையான எதிர்ப்பு தெரிவித்ததும், 'முதலமைச்சர் இன்னும் இது பற்றி முடிவெடுக்க வில்லை' என்று 'பொய் துறை' அமைச்சர் ஆதவ் அர்ஜுனா சொல்லி இருக்கிறார். 'பட்டினப்பாக்கத்தில் ரூ. 1200 கோடி மதிப்பீட்டில் 25.55 ஏக்கர் பரப்பளவில் புதிய தலைமைச் செயலகம், பேரவை வளாகம் அமையும்' என்று செப்டம்பர் 8 ஆம் தேதியன்று அரசாணை போட்டுள் ளார்கள். முதலமைச்சர் அனுமதி இல்லாமல் அரசாணை போட முடியுமா?

முதலமைச்சருக்கு சொல்லாமல் அரசாணை போட்டவர் யார்? இது ஆட்சி யல்ல, வெறும் காட்சி தான் என்பதற்கு இதை விட வேறு ஆதாரம் தேவை யில்லை. அரசாணைகளை வெறும் காகிதங்களாக ஆக்கிவிட்டார்கள்.

●●

தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல்

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம்!



கழக இளைஞர் அணிச் செயலாளர் - தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 101 - தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் சுற்றுப்பயண விவரம்:-

நாள் : 03.10.2026 (சனிக்கிழமை)

வ.எண்	நேரம்	ஒன்றிய / நகர / பேரூர் கழகங்கள்	இடம்
1.	மாலை 4.30	குண்டடம் மேற்கு ஒன்றியம்	நொச்சிப்பாளையம்
2.	மாலை 5.30	தாராபுரம் மேற்கு ஒன்றியம்	தளவாய்பட்டணம்
3.	மாலை 6.00	தாராபுரம் நகரம்	பெரியார் சிலை அருகில்
4.	இரவு 7.00	தாராபுரம் நகரம்	வடதாரை

தேர்தல் பணிக்குழு

101 – தாராபுரம் (தனி) சட்டமன்ற தொகுதி

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தல்:

வாக்களித்த மக்களுக்கு துரோகம் செய்தவர் மரகதம் குமரவேல்!

தேர்தல் பிரச்சாரத்தில் முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

மதுராந்தகம், செப். 30-

மதுராந்தகம் சட்ட மன்றத் தொகுதி இடைத் தேர்தல் பிரச்சாரத்தில், 'மரகதம் குமரவேல் வாக்களித்த மக்களுக்கு துரோகம் செய்தவர்'என்று முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற தி.மு.கழக கொறடாவுமான எ.வ. வேலு குறிப்பிட்டார்.

மதுராந்தகம் சட்டமன் றத் தொகுதி அச்சிறுப்பாக் கம் மத்திய ஒன்றியத்தில் நேற்று கூட்டணி கட்சி களின் ஆசிபெற்ற வேட் பாளர் பரந்தாமனுக்கு உத யசூரியன் சின்னத்தில் தீவிர வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

அடுத்த மாதம் 6ம் தேதி நடைபெற உள்ள மதுராந் தகம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் திராவிட முன்னேற்றக் கழகம் சார் பில் இ.பரந்தாமன் போட்டி யிடுகிறார். அவருக்கு கூட் டணிக் கட்சி தலைவர்கள்



முன்னாள் அமைச்சர்கள் நட்சத்திர பேச்சாளர்கள் தீவிரவாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று (29.09.2026 - செவ்வாய்க்கிழமை) காலை 8.00 மணிக்கு, பெரும்பேர்கண்டிகை, சிறுபேர்பாண்டி, கல்லிய குணம், பாபுராயன் பேட்டை, பொற்பனங் கரணை, ஆனைகுன்றம், எலம்பாக்கம், மோகல் வாடி, ரெட்டிபாளையம், ஆகிய ஊராட்சிகளில் தி.மு.கழக வேட்பாளர் இ.பரந்தாமனுக்கு உதய சூரியன் சின்னத்தில் முன்னாள் அமைச்சர் எ.வ. வேலு வாக்கு சேக ரிப்பில் ஈடுபட்டார்.

முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:-

இந்த தேர்தல் ஏன் வந் தது என கேள்வி எழுப்பிய அவர் ஐந்து மாதத்தில் ஒரு தேர்தல் இதுவரை எப் போதும் வந்ததில்லை என வும் இதுதான் முதல் முறை என்றும் இறந்துவிட்டால் தான் இடைத்தேர்தல் வரும் ஆனால் கடந்த முறை அ.தி.மு.க.வில் நின்று வெற்றி பெற்று 20 தினங்களில் ஒரு சட்ட மன்ற பதவியை துட்சமாக நினைத்து ராஜினாமா செய் கிறார் என்றால் அவரை என்னவென்று நாம் கூறு வது எனவும் அவர் துரோகி அ.தி.மு.க. கட்சிக்கும் துரோகம் செய்துள்ளார். வாக்களித்த மக்களாகிய உங்களுக்கும் துரோ கத்தை செய்து உள்ளார். அவரை ஒரு துரோகியாக நாம் பார்க்க வேண்டும் எனவும் ஆனால் தி.மு.க. சார்பில் நிறுத்தி வைக்கப் பட்டுள்ள வேட்பாளர் தி.மு.க.வில் பல ஆண்டு களாக பல்வேறு கட்சி பணிகளை செய்தவரும் உயர்நீதிமன்றத்தின் சிறந்த வழக்கறிஞராக திகழ்ந்து வருகிறார். அவர் உங்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து தருவார் எனவும், கடந்த தி.மு.க. ஆட்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெண்களுக்கான பல்வேறு திட்டங்களை கொண்டு வந்தார் என் றும்,

குறிப்பாக கொரோனா காலத்தில் 4 ஆயிரம், மாதா மாதம் ஆயிரம் என பட்டிய லிட்டு பேசிய அவர் அவ ருடைய வேட்பாளர் தான் தற்போது உதயசூரியன் சின்னத்தில் நிற்கிறார் என வும் தெரிவித்தவர் கடந்த தி.மு.க. ஆட்சியில் செய்த திட்டங்களை பட்டியலிட் டார்.

இவ்வாறாக பேசினார்.

தொடர்ந்து பேசிய தி.மு.க. வேட்பாளர் பரந் தாமன் தி.மு.க. சார்பில் போட்டியிடும் எனக்கு வாக்களித்தால் உங்க ளுக்கு நன்றியுடன் பணி யாற்றுவேன் எனவும் பல் வேறு திட்டங்களை இந்த தொகுதிக்கு கொண்டு வருவேன் என்றும் உங்க ளுக்கு நம்பிக்கையாக இருப்பேன் எனவும் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் சுந்தர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.எஸ். தரணிவேந்தன், செல்வம் ஒன்றியச் செயலாளர் கமலக்கண்ணன், மகளிர் அணியினர் மற்றும் ஒன் றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

ஆதாரமற்ற, அவதூறு செய்தி வெளியிட்ட

"ஜூனியர் விகடன்" மீது ரூ.10 கோடி மான நஷ்டஈடு வழக்கு!

முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நோட்டீஸ்!



சென்னை, செப். 30 -

முன்னாள் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி குறித்து ஆதாரமற்ற, அவதூறு செய்தி வெளியிட்டதாக 'ஜூனியர் விகடன்' ஆசிரியர், வெளியீட்டாளர் உட்பட 12 பேருக்கு வழக்கறிஞர் மூலம் சட்டப்பூர்வ நோட்டீஸ் அனுப் பப்பட்டுள்ளது.

23.09.2026 நாளிட்ட ஜூனியர் விகடன் இதழில் "ரூ.1,000 கோடி முறைகேடு?", "சிக்கிய அன்பில்..." என அட்டைப்படக் கட்டுரை வெளி யிட்டு, அவதூறான சித்திரங் களுடன் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தியுள்ளனர்.

பி.டி.அரசகுமார் மீதான வழக்கில் அன்பில் மகேஸுக்கு எவ்விதத் தொடர்பும் இல்லை; மத்திய குற்றப்பிரிவு (CCB) எஃப்.ஐ.ஆரிலும் இவரது பெயர் இல்லை.

மேலும், அடிப்படை விளக் கம் எதுவும் கேட்காமல் உள் நோக்கத்துடன் இக்கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது.

48 மணி நேரத்திற்குள் இணைய தளத்திலுள்ள அவதூறுக் கட்டு ரையை நீக்கி, பத்திரிகை விற்ப னையை உட னடியாக நிறுத்த வேண்டும்.

முக்கிய நாளி தழ்கள் மற்றும் தொலைக்காட்சி களில் நிபந்தனை யற்ற மன்னிப்பு கேட்க வேண் டும்.

நற்பெயருக்கு ஏற்பட்ட பாதிப் பிற்கு ரூ.10 கோடி நஷ்ட ஈடு வழங்க வேண்டும்.

48 மணி நேரத்திற்குள் இதற்கு உடன் படாவிடில் குற்ற வியல் மற்றும் உரிமையியல் வழக்குகள் தொடரப்படும் என சட்டப்பூர்வ நோட்டீஸில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தாராபுரம் (தனி) தொகுதி இடைத்தேர்தல்!

தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் எம்.எல்.ஏ. பிரச்சாரம்!



தேசிய முற்போக்கு திராவிட கழக பொதுச் செயலாளர் திருமதி.பிரேமலதா விஜயகாந்த் எம்.எல்.ஏ. அவர்களின் 101 - தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி இடைதேர்தல் சுற்றுப்பயண விவரம் :-

நாள் : 01.10.2026 (வியாழக்கிழமை)

வ.எண்	நேரம்	ஒன்றிய / நகர / பேரூர் கழகங்கள்	இடம்
1.	மாலை 5.45	மூலனூர் கிழக்கு ஒன்றியம்	நால்ரோடு (கருப்பன்வலசு)
2.	மாலை 7.15	கொளத்துப்பாளையம் பேரூர்	கரையூர்
3.	இரவு 8.15	தாராபுரம் மேற்கு ஒன்றியம்	அலங்கியம்

தேர்தல் பணிக்குழு

101 - தாராபுரம் (தனி) சட்டமன்ற தொகுதி